# உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது மக்கள் முறைப்பாடு விசாரணைகள்

USAID
FROM THE AMERICAN PEOPLE

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

**உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது மக்கள் முறைப்பாடு விசாரணைகள்**

முதல் பதிப்பு 2012, நவம்பர்

டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா
இல 06, 37ஆவது ஒழுங்கை,
இராணி வீதி,
கொழும்பு 03.

ISBN: 978-955-1281-57-1

**ஆலோசகர்கள்:**
R. M. S. B. ரத்னாயக்க அவர்கள் - இலங்கை நிர்வாக சேவை
W. M. M. B. வீரசேகர அவர்கள் - இலங்கை நிர்வாக சேவை
Y. M. சேனாநாயக்க அவர்கள் - செயலாளர், வாரியபொல பிரதேச சபை
சட்டத்தரணி ஜகத் லியனாரச்சி
ஆனந்த ஜயசேகர

**வளவாளர்கள்**
சாந்த குலத்துங்க
டில்ஷான் வீரசிங்க

**கணனி பக்க வடிவமைப்பு**
ஹரித்த தஹநாயக்க

**நன்றிகள்**
**லங்காபுர மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர்கள் உள்ளிட்ட செயற்குழுவிற்கும், பங்கேற்பு ஆட்சிக்கு வசதியளிக்கும் உறுப்பினர்களுக்கும்.**

இந்த கைநூல் அமெரிக்க மக்களின் பங்களிப்புடன், சர்வதேச அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் (USAID) நிதியுதவியுடன் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட ஊழலை குறைத்தல் மற்றும் நல்லாட்சி முறையை மேம்படுத்தலுக்காக நிறுவனங்களின் இயலுமைகளை வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அச்சிடப்படுகின்றது.

© அனைத்து உரிமைகளும் கொண்டது. இதில் உள்ளடக்கும் விடயங்களை பயன்படுத்துவதில்/ அச்சிடுவதில், அதற்காக டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் எழுத்து மூலம் அனுமதி பெறப்படல் வேண்டும்.

# உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது மக்கள் முறைப்பாடு விசாரணைகள்

# முன்னுரை

உள்ளூராட்சி சபைகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அவற்றின் சேவைகள் தொடர்பில் மக்கள் திருப்தியடையாத சந்தர்ப்பங்களில், அது குறித்து எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கம் அளித்தலுமே இந்த சிறிய கைநூலின் நோக்கமாக உள்ளது.

பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றும் சிறந்த அளவில் குறித்த சேவையை பெற்றுக் கொள்வதற்கும், பொதுமக்கள் எதிர்பார்க்கும் வகையில் மிகுந்த பொறுப்புடன் சேவையை வழங்கும் நடைமுறையை தயாரிப்பதற்கு உள்ளூராட்சி சபை நிறுவனங்களுக்கும் என இரு தரப்பினருக்கும் இந்த கைநூல் பயனுள்ளதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

தேசிய மற்றும் பிரதேச நல்லாட்சியை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா

# உள்ளடக்கம்


உள்ளூராட்சி சபைகள் என்பது எவை? 01

ஏன் எமக்கு உள்ளூராட்சி சபைகள் அவசியமாகின்றன? 02

உள்ளூராட்சி சபை நிறுவனம் அமைக்கப்பட்டுள்ள முறை 04

உள்ளூராட்சி சபை எவ்வாறு செயற்படுகின்றது? 06

உள்ளூராட்சி சபைகளால் வழங்கப்படும் சேவைகள் 07

உள்ளூராட்சி சபைகளுக்கு கிடைக்கும் முறைப்பாடு மற்றும் கோரிக்கை 16

சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் 17

எதிர்பார்க்கும் சேவை உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் அமையவில்லை எனின்... 18

உள்ளூராட்சி சபையில் சேவை வழங்குவதில் உள்ள வரையறைகள் 24

உள்ளூராட்சி சபை செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களின் பொறுப்புக்கள் எவை? 25

# உள்ளூராட்சி சபைகள் என்பது எவை?

பிரதேச சபை, நகர சபை அல்லது மாநகர சபை என்பனவே உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் எனப்படுகின்றன. கிராமத்தில் அல்லது நகரத்தில் வாழும் மக்களுக்கு, அன்றாடம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேவையான உதவி மற்றும் ஆதரவை வழங்குவதே இந்த நிறுவனங்களின் செயற்பாடுகளாகும். இந்த நிறுவனங்கள் பொது மக்களின் விருப்பு வாக்குகளால் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கியுள்ளதால், குறித்த பிரதேச மக்களின் தேவைகளை நன்கு அறிந்து, பயனுறுதி மிக்க சேவையை வழங்க முடியும்.

இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு கிராமத்தினரின் ஆதரவு மிகவும் அத்தியாவசியமானது. இந்த அபிவிருத்தி மற்றும் முன்னெடுத்தல் செயற்பாடுகளுக்கு நாமும் கைகொடுத்தல் வேண்டும். வருமான வரி மற்றும் வேறு வரிகளை உரிய நேரத்தில் செலுத்தி எமது பங்களிப்பை வழங்க வேண்டும். இவ்வாறு பார்க்கும் போது, உள்ளூராட்சி சபைகள் கிராம மக்களிற்கு சேவை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனமாகும்.

# ஏன் எமக்கு உள்ளூராட்சி சபைகள் அவசியமாகின்றன?

நாம் சமூகத்தில் தனித் தனியாக வாழவில்லை. குடும்பம், சமூகம் மற்றும் சமுதாயம் என்பதன் அடிப்படையில் நாம் ஏனையோருடன், ஒன்றிணைந்து வாழ்கின்றோம். இவ்வாறு சமூகத்தில் வாழ்க்கையை முன்னெடுக்கும் போது, சிற்சில தேவைகளை ஒன்றிணைந்து நிறைவேற்றிக் கொள்வதற்கும், புதிதாக உருவாகும் பிரச்சினைகளை ஒன்றிணைந்து பொது இணக்கப்பாட்டுடன் நடவடிக்கை எடுத்து தீர்ப்பதற்கும் நேரிடும்.

பண்டைய காலத்தில் காணப்பட்ட கிராம சேவைகள் முறையை, நடைமுறை சமூகத் தேவைக்கு பொருந்தும் வகையில் பயன்படுத்தும் வியூகமாக உள்ளூராட்சி சபைகளை குறிப்பிட முடியும்.

கிராம வீதிகளை அமைத்தல், ஒழுங்கமைத்தல், சுற்றாடலை சுத்தமாக வைத்துக் கொள்ளல், முன்பள்ளி பாடசாலை, வாராந்த சந்தை போன்ற அன்றாட வாழ்க்கைக்கு தேவையான சேவைகளை முன்னெடுப்பதும், அவற்றை அபிவிருத்தி செய்வதும் இந்த நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் சேவைகளில் பிரதான இடம் வகிக்கின்றன.

நாம் அவ்வளவு தூரம் அக்கறை கொள்ளாத போதிலும், அதிகளவிலான பொது நடவடிக்கைகள் உள்ளூராட்சி சபைகளினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன. பிறப்பு முதல்

இறப்பு வரையான அனைத்து நடவடிக்கைகளிலும் உள்ளூ ராட்சி சபை சம்பந்தப்படுவதாக பொதுவாக கூறுவார்கள். உதாரணமாக, பெண் ஒருவர் கர்ப்பம் தரிக்கும் போது, இரண்டு அல்லது மூன்று மாதங்களாக இருக்கும் போது, அருகில் உள்ள வைத்திய நிலையத்திற்கு செல்வார். அந்த வைத்திய நிலையம் உள்ளூராட்சி சபையின் ஆதரவுடனேயே முன்னெடுக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்குவதே இங்கே தான். முன்பள்ளி, நூலகம், வாராந்த சந்தை, சந்தை, விளையாட்டு மைதானம், பொது மலசலக் -கூடம் என்பவற்றை நடத்துவதும், மயானம் மற்றும் இறுதிக் கிரியை நடத்தும் இடம் போன்ற சேவைகளை நிர்வகிப்பதும் இந்த உள்ளூராட்சி சபை நிறுவனங்களே.

அது மாத்திரமின்றி நாம் போக்குவரத்து செய்யும் வீதிகளை பராமரிப்பதும், மனித நடவடிக்கைகளால் ஏற்படும் கழிவுகளை சேமித்து, சுற்றாடலை சுத்தமாக வைத்துக் கொள்வதும் உள்ளூராட்சி சபையாகும். வதிவதற்கான காணிகளை தெரிவு செய்யும் போது, வீதியின் அகலத்தை தீர்மானிப்பதும் இந்த நிறுவனங்களாகும். இந்த நிறுவனங்கள் அமைந்திருப்பது எம்முடைய நலனுக்காக என்பதனை தற்போது நீங்கள் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

# உள்ளூராட்சி சபை நிறுவனம் அமைக்கப்பட்டுள்ள முறை

உள்ளூராட்சி சபை நிறுவனத்தில் பொதுமக்களின் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இருப்பர். அவர்களில் ஒருவர் உள்ளூராட்சி சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பார். இதற்கு அப்பால் உள்ளூராட்சி சபையில் செயற்குழு ஒன்று இருக்கும். அந்த குழுவைச் சேர்ந்தவர்களை இந்த சபையின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான ஆதரவினை வழங்குவர். உள்ளூராட்சி சபையானது முழுமையான அதிகாரம் கொண்ட நிறுவனமாகும். குறித்த பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கையை முன்னெடுத்தல், தீர்மானம் எடுத்தலுக்கு, சட்டம் உருவாக்குவதற்கு, வருமான வரி சேகரிப்பதற்கு மற்றும் துரித நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உள்ளூராட்சி சபைகளினால் இயலுமாக இருக்கும்.

எனவே, இதனை ‘கிராம அரசாங்கம்’ எனவும் அழைப்பர்.

இது வேறு யாருடையதும் அல்ல. எமது நலனுக்காக, எம்மால் உருவாக்கப்பட்டதாகும். அதாவது, இந்த சபையின் உண்மையான உரிமையாளர்கள் நாம். அதாவது, பொதுமக்கள்.

இந்த நிறுவனம் கிராமத்திற்கு, நகரத்திற்கு செய்யும் சேவை அரசாங்கத்தின் ஊடாக சட்டமயமாக்கப்பட்டுள்ளது.

அதாவது, சட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதுவே கட்டளைச் சட்டத்தின் ஊடாக அறியப்படுகின்றது. இதன் பிரகாரம் மாநகர சபையானது, மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழும், நகர சபையானது, நகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழும், பிரததேச சபையானது, பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றது. நாட்டில் உள்ள மக்களுக்கு சேவை வழங்குவதற்காக இந்த நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் வழிகாட்டும் வகையில், முறையான வகையில் பயணிக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் உள்ளூராட்சி சபை திணைக்களம் உண்டு. அங்கு உள்ளூராட்சி சபை ஆணையாளரும், மாவட்ட மட்டத்தில் உதவி ஆணையாளரும் உளர்.

# உள்ளூராட்சி சபை எவ்வாறு செயற்படுகின்றது?

உள்ளூராட்சி திணைக்களங்களுக்கு மேலே, உள்ளூராட்சி தொடர்பில் செயற்படும் அமைச்சு ஒன்று உள்ளது. இந்த அமைச்சில் செயலாளரும், நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சரும் உள்ளனர். பெரும்பாலும் இந்த அமைச்சுப் பொறுப்பை, மாகாண முதலமைச்சரே வகிப்பார். உள்ளூராட்சி சபை என்பது, தாமே பணம் சேமித்து, தமது பணத்திலேயே தமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக செலவு செய்யும் நிறுவனமாகும். உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களின் சம்பளம் மாத்திரமே மாகாண சபையினால் வழங்கப்படும்.

எனவே, நாம் உரிய நேரத்தில் வரி செலுத்தினால் மாத்திரமே இந்த சபைகளுக்கு நிதி கிடைக்கும். வரி என்பது, அபிவிருத்திக்காக நிதி சேகரிக்கும் ஒரு முறையாகும். உள்ளூராட்சி சபையினால் சேகரிக்கப்படும் சட்டரீதியான வருமானத்தின் ஊடாகவே கிராம அரசாங்கம் பணம் சேகரிக்கும். நாம் அதனை ஏக்கர் வரி, வருமான வரி, கடை குத்தகை (சபையின்) மற்றும் வேறு சேவை கட்டணம் என குறிப்பிடுவோம்.

சில உள்ளூராட்சி சபைகளுக்கு சிறிதளவு வருமானமே கிடைக்கும். இதனால் அந்த சபைகளுக்கு நாம் ஏற்கனவே கூறியது போல பணியாற்றுவதற்கான பலம் குறைவு. நாமும் இந்த நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும்.

# உள்ளூராட்சி சபைகளால் வழங்கப்படும் சேவைகள்

இந்த மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை சட்டமூலங்களில், இந்த உள்ளூராட்சி சபைகளினால் கீழே குறிப்பிட்ட சேவைகள் வழங்கப்படல் வேண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை பிரதானமாக மூன்று பிரிவுகளாக பிரிக்க முடியும். எவ்வாறாயினும், குறித்த சபைகளால் வழங்கப்படும் சேவைகளை சிறப்பாக வழங்க வேண்டுமாயின், பொது மக்களும், கிராமத்தின் அரசாங்கமாக கருதப்படும் உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து பணியாற்றுதல் வேண்டும்.

சட்டமூலத்தின் அடிப்படையில், குறித்த மூன்று பிரிவுகளும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

1. பொது வீதிகள் (கிராம வீதிகள்) – நிர்மாணித்தல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்
2. வெகுசன சுகாதார சேவை மற்றும் நோய்கள் வராது காத்தல்
3. பொது பயன்பாட்டு சேவை

போன்ற விடயங்கள் தொடர்பில் குறித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் சுய விளக்கங்களின் பின்னர் மற்றும் நலன்புரிக்காக அனைத்து வசதிகளையும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற அனைத்து விடயங்களையும், துரிதமாக செய்தல்

- துரிதமாக செய்தல்
- ஆட்சி செய்தல்
- மற்றும் நிர்வாகம் செய்தல் என்பன பிரதேச சபையின் பொறுப்புக்களாகும்.

இந்த சேவைகளை முறையாகப் பெற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. அதேபோல, இதற்காக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் உள்ளன.

இதனைத் தவிர, ஏதாவது ஒரு பிரதேசத்திற்கு போதியளவு பொது பயன்பாட்டு சேவை வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை திருப்தியடையுமாயின், அந்த பிரதேசத்தின் வளர்ச்சி, கிராம பிரதேசம் என்ற வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடுவதும் பிரதேச சபையின் பொறுப்பாகும்.

**வளர்ச்சியடைந்த கிராம பிரதேசம் என பெயரிடுவதற்கு மக்கள் எதிர்ப்பு வெளிப்படுத்தியமை**

சில வருடங்களுக்கு முன்னர் தென் மாகாணத்தில் பிரதேச சபை ஒன்று, தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமத்தை வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிடுவதற்கு பிரேரணை ஒன்றை கொண்டு வந்தது. பிரதேச சபையின் 134ஆவது உறுப்புரையின் கீழ் இவ்வாறான பிரேரணையை நிறைவேற்ற முடியும். பிரதேச சபையின் தலைவர் இந்த பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போது, வளர்ச்சியடைந்த கிராமங்களின் அம்சங்களான தொலைபேசி வசதி, வீதி அபிவிருத்தி, மின்சாரம், வீதி விளக்கு போன்ற வசதிகள் பாரிய அளவில் இந்த கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இந்த பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டதுடன், இவ்வாறான வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிடுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் குறிப்பிட்டு, இந்த பிரேரணை தொடர்பில் மக்களின் எதிர்ப்பு இருப்பின் சபைக்கு அறிவிக்குமாறும் கிராமம் முழுவதிலும் அறிவித்தல்கள் மூலம் கிராமத்தினர் அறியச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இது குறித்து அறிந்து கொண்ட கிராமத்தினர், வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிடப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து ஆராய்ந்து பார்த்தது. அவ்வாறு தேடிப் பார்த்த போது, வளர்ச்சியடைந்த கிராமமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், வருடாந்த பெறுமதிக்கு தாம் வரி செலுத்த வேண்டும் என்பதனை அவர்கள் அறிந்து கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய கிராமத்தினர், பிரதேச சபையினால் தமது கிராமம் வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிடப்பட்டுள்ள போதிலும், பிரதேசத்தின் அடிப்படை வசதிகள் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளமையையும் கண்டறிந்தனர். தமது கிராமத்தினை, வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிடுவதற்கு வீதி கட்டமைப்பு, நீர், மின்சாரம், போக்குவரத்து, தொலைபேசி, போக்குவரத்து மற்றும் விளையாட்டு கல்வி, கலாசார வசதிகள் என்பன போதிய அளவில் இல்லை என்பதனை அவர்கள் அறிந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடிய கிராம மக்கள் தமது கிராமத்தினை, வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிடுவது தொடர்பில் தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும், இருப்பினும் அவ்வாறு செய்வதற்கு முன்னர், தாம் நீண்ட காலமாக எதிர்நோக்கி வரும் பிரதான குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறும் கோரினர். இது தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக, கிராமத்தினர் 500 பேர் கையொப்பமிட்ட, மனுவொன்று பிரதேச சபைத் தலைவர், உபதலைவர், உள்ளூராட்சி சபை ஆணையாளர் மற்றும் முதலமைச்சருக்கு அனுப்பி கையளிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த உள்ளூராட்சி சபை ஆணையாளர், கிராம மக்களின் கோரிக்கை நியாயமானது எனவும், குறித்த வசதிகளை மேம்படுத்தாது, குறித்த கிராமத்தை, வளர்ச்சியடைந்த கிராமமாக பெயரிட வேண்டாம் எனவும்

அவர் சுட்டிக்காட்டியிருந்தார். பிரதேச சபையின் ஊடாக நிறைவேற்றப்படும் நடவடிக்கைகள் மற்றும் பிரதேச நிர்வாகம் தொடர்பில் கிராமத்தினருக்கு அறியத் தந்து செயற்படுவதன் காரணமாக மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தாது, பிரதேச சபையினால் செயற்பட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள இந்த சேவை வழங்கல் தொடர்பில் தெரிந்து கொள்வோம்.

## பொது வீதி

எங்கள் நாட்டு வீதிகளின் உரிமை குறித்து கதைக்கும் போது, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு, மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு / மாகாண வீதி அதிகார சபைக்கு மற்றும் வேறு திணைக்களங்களுக்கு உட்படாத கிராம பொது வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தாகும். இதன் பிரகாரம், கறுத்தை வீதி, கல் வீதி, இரட்டை வீதி, ஒற்றையடிப் பாதை போன்றன பிரதேச சபைக்கு உட்பட்டவை. தற்போது இவற்றில் பலவற்றுக்கு கொங்க்ரீட் போடப்பட்டு, தார் போடப்பட்டு, சீமேந்துக் கல் போடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வீதிகள் கிராம சபை வீதிகள் எனவே அடையாளங் காணப்பட்டன. இவற்றை அரசாங்கம் நு தர பாதைகள் என வகைப்படுத்துகின்றது.

சட்டரீதியான உரிமை பிரதேச சபைகளுக்கு இருக்கின்ற போதிலும், இந்த பாதைகளில் பெரும்பாலானவை கிராம மட்டத்தில், சிரமதானம் ஊடாக அனேக சந்தர்ப்பங்களில் பராமரிக்கக் கூடியவை ஆகும். வீதியில் தார் அல்லது

கொங்க்ரீட் போன்ற நிரந்தரமான பாதுகாப்பு இடும் போது பிரதேச சபையின் முழுமையான தலையீடு அவசியமாகும். எவ்வாறாயினும், இந்த அனைத்து பொது வீதிகளும் உங்களுடைய தேவைக்காக பயன்படுத்திக் கொள்வதற்காக இருப்பதுடன், பராமரிப்பதற்கான பொறுப்பும் உங்களுடையதாக இருக்கின்றது.

## வெகுசன சுகாதார சேவையும் நோய்களை தடுத்தலும்

ஆரோக்கியமான வளங்களைக் கொண்ட சுற்றாடலை உருவாக்குவதும், நோய்களை தடுத்தலுக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் செயற்பாடுகளில் பெரும்பாலான பங்கு உள்ளூராட்சி சபைகளிடம் உள்ளன. நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல், தேகாரோக்கியமான மலசல கூட பாவனை, உணவு விநியோகிக்கும் மற்றும் தயாரிக்கும் இடங்கள் சுத்தமாக இருப்பதனை பரிசோதித்தல் என்பன அவற்றில் சிலவாகும்.

இதன் கீழ்,

- விசர் நாய்க்கடி நோயினை தடுத்தல் - இதன் போது பிரதேச சபை நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல் மற்றும் பதிவு செய்தல், நாய்கள் பெருக்கத்தினை தடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதுடன், அதற்காக நாய்களை உங்களுடைய ஒத்துழைப்பை வழங்க வேண்டியது உங்களது பொறுப்பாகும்.

- நுளம்புகள் பெருகும் இடத்தை அழித்தல் மற்றும் அது குறித்து சம்பந்தப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் என்பன பிரதேச சபை

ஊடாக முன்னெடுக்கப்படுவதுடன், அதனை பிரதேச சபை அல்லது வெளி நிறுவனம் ஒன்றினால் மாத்திரம் நிறைவேற்ற முடியாது என்பதனால், அதன் பொருட்டு நுளம்பு பெருகாதவாறு வீடு மற்றும் சுற்றுச் சூழலை வைத்துக் கொள்ள வேண்டியது உங்களது கடமையாகும்.

- சுற்றுச் சூழலில் சேரும் குப்பைகளை அகற்றுவது பிரதேச சபையின் நடவடிக்கையாகும். எவ்வாறாயினும், குப்பை சேருவதனை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்த குப்பைகளை வீட்டிலேயே மக்கும் குப்பைகள், மக்கா குப்பைகள் (பிளாஸ்டிக், கண்ணாடி, கடதாசி, இரும்பு) என பிரித்து இயற்கையாக மக்கும் குப்பைகளை உரம் தயாரிப்பிற்கு பயன்படுத்தல் உங்கள் பொறுப்பாகும்.

- பிரதேச சபையின் சுகாதார வைத்திய அதிகாரி (MOH) / வெகுசன சுகாதார பரிசோதகர் (PHI) என்போருடன் இணைந்து பிரதேச சபை புரிய வேண்டிய விடயங்கள் அதிகமாகும். அதிலும் மிகவும் முக்கியமான உணவு மற்றும் தேகாரோக்கிய, கல்வி தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் இந்த நடவடிக்கைகளுடன் வெகுசன நலனுக்காக முன்னெடுக்கப்படும் வேறு விடயங்களும் உள்ளன. அவையாவன:

- பெருகும் நோய் பரவாது இருக்க நடவடிக்கை எடுத்தல்.
- மகப்பேற்று மற்றும் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையங்களை நடத்தல்.
- மயானம் மற்றும் பிரேத அறைகளை நடத்தல் மற்றும் குறித்த இடத்திற்குள் அதன் செயற்பாடுகளை மட்டுப்படுத்தல்.
- நகர சபை மற்றும் பிரசித்தமான பொது இடங்களில்

சிறந்த சேவைகளை முன்னெடுத்தல்.

- (கால்நடைகளை கொல்லுதல் சட்டமூலம்) இறைச்சி தேவைக்காக (மாடுகள், ஆடுகள், பன்றிகள், கன்றுகளை கொலை செய்வது சுகாதார பாதுகாப்புடன் முன்னெடுக்கப்-படுகின்றதாக என்பதனை கண்காணித்தல் மற்றும் அதற்கான அனுமதி வழங்கல்.
- சுகாதாரத்திற்கு ஆரோக்கியமானதாக மலசல கூடங்களை அமைத்தல், நிதியுதவி அளித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான நடவடிக்கை
- வெகுசன சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் மற்றும் சிக்கல் நிறைந்ததாக பன்றி பண்ணைகள், கோழி பண்ணைகள், நெல் ஆலைகள், பலகை ஆலைகள் போன்ற வியாபார நிலையங்கள் முன்னெடுக்கப்படுவதனை தடுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்கல் (உதாரணமாக, சுண்ணாம்பு ஆலைகள், கல் ஆலைகள், அரிசி தயாரிக்கும் இடங்கள் போன்றன)
- கழிவு நீர் மற்றும் மழை நீர் என்பவற்றை முறையாக வெளியேற்றல், பொது குளிக்கும் இடங்களை வழிநடத்தல், மற்றும் வசதி வழங்கல்.
- உள்நாட்டு வைத்திய வசதிகளை எளிமையாக்கல் மற்றும் அதற்காக வசதியளித்தல். உதாரணமாக ஆயுர்வேத வைத்திய நிலையங்கள், பஞ்சகர்ம மற்றும் யோக அப்பியாசங்களை பிரபலமாக்கல் போன்றன.

இவற்றை எமது நலனுக்காக முறையாக பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் எமது அர்ப்பணிப்பு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பு இருத்தல் வேண்டும்.

# உள்ளூராட்சி சபைகள் ஊடாக வழங்கப்படும் பயன்பாட்டு சேவைகள்

பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்களின் பொது நலனிற்காக பயன்படும் வகையில் கீழ்வருவன பொது பயன்பாட்டு சேவைகள் என குறிப்பிடப்படும். அவையாவன:

- பொது பஸ் தரிப்பு நிலைய வசதிகளை வழங்கல்
- குடி நீர் விநியோகித்தல் மற்றும் நீர் தேக்கங்களை பாதுகாத்தல்
- சந்தை கட்டடத் தொகுதி
- வாராந்த சந்தை மற்றும் நடமாடும் சந்தைகளை, சந்தைகளில் நடத்துவதற்கு வசதி வழங்கல்.
- விளையாட்டு அரங்குகள், மைதானம், சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்தல், பராமரித்தல் மற்றும் முறையாக நடத்துதல்.
- வீதிகளுக்கு வெளிச்சம் வழங்கல்.
- குடிநீர் விநியோகித்தல்.

இவற்றைத் தவிர உள்ளூராட்சி சபைகளினால் நலன்புரி சேவைகளும் வழங்கப்படுகின்றன. அவையாவன:

- அவசர அனர்த்த (வெள்ளம், சூறாவளி, புயல் காற்று, தீ விபத்து போன்ற இயற்கை அனர்த்தங்களுக்காக) நிவாரணத் திட்டம்.
- மத நிகழ்வுகள், தேசிய நிகழ்வுகள் போன்ற

கலாசார மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் கொண்ட நிகழ்வுகளுக்காக நிதியுதவி வழங்கல். குறித்த நிகழ்வுகளை (உலக சிறுவர் தினம், முதியோர் தினம், நீர் தினம், உள்ளூராட்சி சபை வாரம், நத்தார் தினம், புதுவருட போட்டி நிகழ்வுகள், வெசாக் பொசன் நிகழ்வுகள்) ஒழுங்கு செய்தல் மற்றும் நடத்துதல்.

- நோய் மற்றும் வறுமைக்கான நிவாரணம் வழங்கல்.
- விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களில் பல்வேறு வசதிகளை வழங்கல்.
- உணவுப் பயிர்ச் செய்கை
- முன்பள்ளி மற்றும் குழந்தை பராமரிப்பு நிலையங்களை நடத்துதல். சனசமூக நிலையம், நிகழ்வு மண்டபம், கலை நிகழ்ச்சிகளை ரசிப்பதற்கான வசதிகளை வழங்கல்.
- நூலக வசதி மற்றும் வாசிக்கும் மண்டபங்கள் என்பவற்றை முன்னெடுத்தல்.
- உடற்பயிற்சி நிலையம்
- வீடுகளுக்காக நிலத்தை பிரித்தளித்தல் மற்றும் தேவையான வசதிகளை திட்டமிடலை ஒழுங்கமைத்தல்.

**இந்த சேவைகளை சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமாயின்...**

உங்களுடைய உள்ளூராட்சி சபை நிறுவனத்தின் வளங்கள், இந்த சேவைகளை வழங்கும் அளவினை தீர்மானிப்பதில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தக் கூடும். எனினும், உள்ளூ-ராட்சி சபையுடன் ஒன்றாக கைகோர்ப்பதன் ஊடாக இவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு இயலும்.

# உள்ளூராட்சி சபைகளுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கை

பிரதேச சபை ஊடாக வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் பொதுவாகவும், தனிப்பட்ட ரீதியிலும் முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படலாம். பொதுவில் முறைப்பாடு என அறியப்படும் இவற்றில் பெரும்பாலானவை கோரிக்கைகளாக இருக்கும். இவைத் தவிர பொதுமக்களின் இன்னல்கள் தொடர்பான ஆவணங்கள் என இவற்றை கருத முடியும்.

இங்கு சமர்ப்பிக்கப்படும் சில கோரிக்கை அல்லது முறைப்பாடு உள்ளூராட்சி சபை அதிகாரிகளின் தலையீட்டின் மூலம் தீர்க்க முடியும்.

உள்ளூராட்சி சபைகளுக்கு சட்டரீதியாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், பெரும்பாலான முறைப்பாடுகள் பிரதேச சபைக்குள்ளேயே நிலவும் முறைகளைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள், செயலாளர்கள் மற்றும் தலைவர்களின் தலையீட்டின் மூலம் தீர்க்க முடியும்.

# சேவைகளின் சிறப்புத் தன்மையை மேம்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

தமது பிரதேசத்தில் உள்ளூராட்சி சபையில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் மக்களுக்கு, உடனடியாக சேவை வழங்குவதற்கு உள்ளூராட்சி சபை பல நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

அவற்றில், பிரஜைகள் பட்டியல் என்பதற்கு விசேட அந்தஸ்து உண்டு.

பிரஜைகள் பட்டியல் அனைத்து உள்ளூராட்சி சபையிலும் காட்சிப்படுத்தப்படுவதுடன், சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் நீங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் அதற்காக செலவாகும் பணம் மற்றும் கால அவகாசம் என்பன அதில் குறிக்கப்பட்டிருக்கும்.

# எதிர்பார்க்கும் சேவைகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில் கிடைக்கவில்லை எனின்...

நீங்கள் உங்களுடைய கடமைகளை முறையாக நிறைவேற்றியுள்ள போதிலும், எதிர்பார்த்த சேவை மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக கிடைக்கவில்லை எனின் மற்றும் அது குறித்து நீங்கள் திருப்தி அடையவில்லை எனின் அதற்கும் தீர்வு உண்டு.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ் குறிப்பிட்ட வகையில், கீழ் குறிப்பிட்ட நபர்களுக்கு உங்களுடைய கோரிக்கை அல்லது முறைப்பாட்டினை சமர்ப்பிப்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. குறித்த முறைப்பாடு அல்லது கோரிக்கையை:

- எழுத்து மூலமாக
- வாய் மூலமாக
- தொலைபேசி மூலமாக
- மின்னஞ்சல் (e-mail) மூலமாக
- முறைப்பாட்டு பெட்டி அல்லது எண்ணங்களை வெளிப்படுத்தும் புத்தகம்
- பொதுமக்கள் அரங்கில் கருத்து தெரிவித்தல் - பொது சபை கூட்டம் நடைபெறும் சந்தர்ப்பத்தில், மக்கள், குறித்த சபையின் பொது மக்கள் அரங்கிற்கு வந்து, பொது மக்கள் பிரதிநிதியின் ஊடாக கோரிக்கையை முன்வைப்பதற்கு இயலும். இது குறித்து சபையின் செயலாளரிற்கு முன்கூட்டியே அறிவித்து செல்வது மேலும் இலகுவானது.

- செயற்குழு கூட்ட சந்தர்ப்பங்களில் கருத்து தெரிவித்தல் பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு பொதுமக்களை தொடர்புபடுத்துவதற்காக பிரதேச சபை சட்ட மூலத்தில் நான்கு செயற்குழுக்களை ஸ்தாபிப்பதற்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்குழுக்கள் நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் செயற்குழு, சுற்றாடல் மற்றும் வசதி செயற்குழு, வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி செயற்குழு, தொழில்நுட்ப சேவை செயற்குழு என்பனவாகும். இந்த செயற்குழு பிரதிநிதிகளுக்கு குறித்த விடயங்கள் தொடர்பில் உங்களுடைய முறைப்பாடு / குறைபாடுகளை சமர்ப்பித்து அவை தொடர்பில் சபையின் கவனத்திற்கு கொண்டு வர முடியும்.

**பிரதேச சபை கிராமத்திற்குச் சென்று மக்களின் பிரச்சினையைத் தீர்த்தல்**

இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச சபை “லங்காபுர“ பிரதேச சபையாகும். இந்த பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் வாழும் பெரும்பாலானோரின் வாழ்வாதாரத் தொழில் விவசாயமாகும். பிரதேச போக்குவரத்து, வேறு அடிப்படை வசதிகள் போதியளவில் இன்மையாலும், அபிவிருத்தியடைந்த கிராமப் பகுதியாக உள்ளமையால் பிரதேச சபையின் வருமானமும் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது.

இன்னல் நிறைந்த வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள, விசேடமாக பொதுப் போக்குவரத்து வசதிகள் இன்மையால் மக்கள் பிரதேச சபைக்குச் சென்று தமது குறைபாடுகளைத் தெரிவிப்பது என்பது பிரயோகரீதியாக யதார்த்தமன்று. இதனால் சபையானது மக்களிடம் சென்று, அவர்களை செவிமடுக்கும் முறையைப் பின்பற்றியது. இங்கு மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் மற்றும் அவர்களின் இன்னல்கள் தொடர்பில் ஆராய்ந்து, பிரதேச சபை ஊடாக தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் மக்களை சந்திக்கும் கூட்டங்கள் நடைபெற்றன. இதன் போது தலைவர் உட்பட்ட குழுவினருக்கு மக்கள் தமது குறைகளை குறிப்பிட்டனர். இவ்வாறான சந்திப்புக்களின் மூலம் மக்களின் குறைகளை உடனடியாக கவனத்திற்கு எடுத்து, தீர்வு பெறுவதற்கும், முக்கியமாக மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கவும் முடியும்.

உங்களுடைய கோரிக்கைகள், முறைப்பாடுகள், குறைபாடுகள் கீழே குறிப்பிட்டவர்களுக்கு சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், இதன்போது உங்களுடைய பெயர், ஊர், முகவரி என்பவற்றுடன் சமர்ப்பிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

- பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள், சபையின் செயலாளர்
- மாவாட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர்
- உள்ளூராட்சி ஆணையாளர்
- விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்
- முதலமைச்சின் செயலாளர்

- முதலமைச்சர்
- ஆளுநர்
- பொது மக்கள் முறைப்பாடு தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்)
- வெகுசன முறைப்பாடு செயற்குழு (மாகாண சபை)
- வெகுசன முறைப்பாடு செயற்குழு (பாராளுமன்றம்)

தற்போதைய தொலைத் தொடர்பு துறையின் வளர்ச்சியின் காரணமாக இந்த முறைகளுக்கு அப்பால்,

மின்னஞ்சல் (e-mail)
குறுஞ்செய்தி (SMS)
அவசர அழைப்பு (Hot line) போன்ற நவீன தொலைத்தொடர்பு முறைகளையும், பிரதேச சபையின் வசதிக்கு ஏற்ற வகையில் நீங்கள் பயன்படுத்த முடியும்.

உங்களுடைய முறைப்பாடு / ஆலோசனையை பிரதேச சபைக்கு முன்வைப்பதில் பிரதேச சபை ஊடாக சேவை இலக்கம் (Job Number) வழங்கப்படுவதுடன், அதன் மூலம் குறித்த முறைப்பாடு / ஆலோசனை தொடர்பில் நீங்கள் மீள விசாரித்து அறிந்து கொள்ள முடியும்.

உங்களுடைய கோரிக்கை நிறைவேறவில்லை எனின் அல்லது தேவையற்ற வகையில் தாமதிக்குமாயின், அது குறித்து மேலே குறிப்பிட்ட ஏனைய சபையின் உயர் அதிகாரிகளிற்கு தெரிவிப்பதில், இந்த சேவை இலக்கத்தை பயன்படுத்த முடியும்.

**சம்பவ கற்கை 2: மக்கள் மற்றும் பிரதேச சபை இணைந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றல்**

தமது கிராமத்தில் அமைந்துள்ள செழிப்பான வயல் நிலத்தை வேறு அபிவிருத்தி தேவைக்காக பயன்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக கிராம மக்கள் அறிந்து கொண்டனர். இந்த வயல் நிலத்தில் பாரிய சந்தைக் கட்டத் தொகுதி ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளமை தொடர்பில் கிராம மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு வெளியிட்டனர்.

இது தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து கண்டறிவதற்கு அவர்கள் முற்பட்டனர். பிரதேச சபை சட்டமூலத்திற்கு அமைய, சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பிரதேச சபையினால் நிறைவேற்றப்படாத எந்தவொரு நிர்மாணப் பணியையும் அல்லது காணி சுவீகரித்தலையும் முன்னெடுக்க முடியாது என்பதனை இதன் போது அவர்கள் கண்டறிந்தனர். மக்கள் ஒன்றிணைந்து இது தொடர்பில் தமது பிரதேச சபை மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தனர். மக்களின் நியாயமான கோரிக்கைக்கு செவிமடுத்து அவர்கள் அனைவரும், இந்த திட்டத்திற்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக குறிப்பிட்டனர். அதன் பின்னர், பிரதேச மக்கள் தமது பிரதிநிதிகளுடன் பிரதேச சபை தலைவரை சந்தித்து இந்த விடயத்தை தெரிவித்தனர். தமது மக்களின் மற்றும் சக உறுப்பினர்களின்

கோரிக்கைக்கு இசைந்து, தமது முழு ஆதரவையும் வழங்குவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த பிரேரணை பிரதேச சபையின் கலந்துரையாடலுக்கு முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், பார்வையிடுவதற்கான கிராம மக்கள், மக்கள் அரங்கிற்கு விஜயம் செய்திருந்தனர். தமது பிரதிநிதிகள் குறித்த விடயம் தொடர்பில் எவ்வாறான கருத்தை வெளியிடுகின்றனர் என்பது தொடர்பில் அவர்கள் கவனம் செலுத்தினர்.

குறித்த காணியை சுவீகரித்தலுக்கு எதிரான பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டதுடன், கிராமத்தின் வயல் நிலத்தையும் அவர்களால் பாதுகாக்க முடிந்தது.

பிரதேச சபையுடன் கைகோர்த்து செயற்படுவதன் மூலம் மக்களுக்கு நலன் கிடைப்பதுடன், கிராமத்தின் ஆட்சியில் செல்வாக்கு செலுத்துவதில் மக்கள் ஆதரவின் பெறுமதி தொடர்பிலும் இதன் போது நிரூபிக்கப்பட்டது.

# உள்ளூராட்சி சபையில் சேவை வழங்குவதில் உள்ள வரையறைகள்

தற்போது காணப்படும் அதிகரித்த மக்கள் தொகையின் காரணமாக, இந்த அனைத்து சேவைகளையும் தனித்து பிரதேச சபையினால் மாத்திரம் வழங்கவோ, நிறைவேற்றவோ முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அவற்றை நிறைவேற்ற நேரிடும்.

இதன்போது உங்களுடைய கோரிக்கை பிரதேச சபை ஊடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

உதாரணம்:

- பிரதேச மக்களின் தேவைகளின் போது பல்வேறு நிறுவனங்கள் இணைதல்
- சுய வேலைவாய்ப்பு
- மகளிர் மேம்பாடு
- போதைப் பொருள் புனர்வாழ்வு

பிரதேசத்தின் தேவையின் அடிப்படையில் மக்களுடன் கலந்துரையாடி தேவைக்கு ஏற்றதாக பல சேவைகளை உருவாக்க முடியும்.

# உள்ளூராட்சி சபை செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களின் பொறுப்புக்கள் எவை?

உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் அறிந்து கொள்ளல் மற்றும் இந்த நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்வதன் மூலம், இந்த நிறுவனங்கள் மேலும் மக்கள் நலன் கொண்டதாக அமைவதற்கு, அவை தொடர்பில் வெளிக்கிளம்பும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இயலும். அதன் பொருட்டு பின்வரும் விடயங்கள் தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும்:

- உள்ளூராட்சி சபை செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்து கொள்ளல்.
- பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை தமது நலனுக்கானவை என்பதனை புரிந்து கொண்டு அவற்றை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பொது நலனுக்கான சட்டங்களை புரிந்து கொள்ளல் மற்றும் பின்பற்றல்
- உள்ளூராட்சி சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வெகுசன கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பினை வழங்கல்.
- முறையாக வரிகளை செலுத்தல்.
- சமூக செயற்றிட்டங்களில் தன்னிச்சையாக ஒத்துழைப்பு வழங்கல்

- சமூக செயற்றிட்டங்களின் பின்னர் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தலுக்கு ஒத்துழைத்தல்.
- உள்ளூராட்சி சபை சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல்
- பொது சொத்துக்களை பாதுகாத்தல்
- இயலுமான வரையில் குப்பைகளின் முகாமைத்துவத்தை வீட்டிலேயே நிறைவு செய்தல்.
- சுற்றுச் சூழல் மாசடையாத வகையில் செயற்படல்.
- உள்ளூராட்சி சபையின் ஆட்சி செயற்பாடுகளில் ஆலோசனை சார் மற்றம் தன்னிச்சையான வகையில் தொடர்புபடல்.
- ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்வரல்.

# உசாத்துணை நூல்கள்:

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டமூலம்

உள்ளூராட்சி சபை – உபுல் அபேரத்ன, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

Local authority Grievance Redress Mechanisms - Ministry of Economic Development

28.

# உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது மக்கள் முறைப்பாடு

**டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**

டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா எனப்படும் ஊழலை ஒழிப்பதனை பிரதான இலக்காகக் கொண்டு செயற்படும் சர்வதேச அமைப்பான டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் இலங்கைக்கான கிளையாகும். உலகம் முழுவதும் பல நாடுகளில் நூற்றுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டுள்ள டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் வலையமைப்பு வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை மற்றும் நல்லாட்சி கொள்கை என்பவற்றை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் 2002ஆம் ஆண்டு முதல் இலங்கையை நேர்மையான நாடாக மாற்றும் நோக்குடன் தமது சொந்தமான பணத்தை பயன்படுத்தி சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றது.

Transparency International Sri Lanka
6, 37th Lane, Queen's Road, Colombo 3
Phone: 011 4369781 - 3
Fax: 011 2506419
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

ISBN: 978-955-1281-57-1